*TNVR060010122024*
*J.M.2 Court, Sattur* *C.C. No.88 of 2024* *Dated:28.07.2026*

FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO **88/2024**
ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.159/2023) |
| Accused | 1. திரு.மாரிமுத்து, த/பெ.திரு.சீனி<br>2. திரு.மகேந்திரன், த/பெ.திரு.சுப்பிரமணியன் |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427– இன் கீழும்,<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427 இன் கீழும், |
| Finding | எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427 இன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| Sentence | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |

Description of the Accused

| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மாரிமுத்து | சீனி | இந்து | கூலி | பேர்நாயக்கன்பட்டி | 23 |
| 2. | மகேந்திரன் | சுப்பிரமணியன் | இந்து | கூலி | பேர்நாயக்கன்பட்டி | 36 |

Date of

| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
|---|---|---|---|---|---|---|---|
| 02.06.2023 | 17.06.2023 | 21.06.2023(Surrender) | 21.06.2023 | 19.06.2024 | 23.07.2026 | 28.07.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 01.04.2024
குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள் :– 04.04.2024
<u>இதன் நகல்</u> :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.28 17:24:06 +0530

Judicial Magistrate, No.II Sattur

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 88/2024
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக,காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.159/2023) |
| 2. | எதிரிகளின் பெயர் (Name) | 1.திரு.மாரிமுத்து (வயது 23/26), த/பெ.திரு.சீனி, 1/154, காமராஜர் காலனி, பேர்நாயக்கன்பட்டி. 2.திரு.மகேந்திரன்(வயது 36/26) த/பெ.திரு.சுப்பிரமணியன், 1/154, காமராஜர் காலனி, பேர்நாயக்கன்பட்டி. |
| 3. | எதிரிகளின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரிகளின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரிகளின் முகவரி (Residence) | |
| 6. | எதிரிகளின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 02.06.2023 |
| 8. | புகார் தேதி (Complaint) | 17.06.2023 |
| 9. | எதிரிகள் கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 21.06.2023(Surrender) |
| 10. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 21.06.2023 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 19.06.2024 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 23.07.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427-இன் கீழும் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 23.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பாண்டீஸ்வரி,B.A.,B.L., அவர்கள்



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.28 17:24:13 +0530

முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

1. **குற்றச்சாட்டு** :–

**1.1.** 02.06.2023 ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் புகார்தாரர் மகன் சரவணன் அவருக்கு சொந்தமான TN 95 A 4452 என்ற பதிவு எண் கொண்ட மூன்று சக்கர ஆட்டோவை பேர்நாயக்கன்பட்டி, காமராஜர் காலனியில் உள்ள அவரது வீட்டின் அருகே ஓட்டி வந்து கொண்டிருந்த போது அங்கு நின்று கொண்டிருந்த எதிரிகள் இருவரும் புகார்தாரரின் மகனை பார்த்து "நிறுத்துடா சுன்னி" என்று சொல்லி திட்டி புகார்தாரருக்கு சொந்தமான ஆட்டோவின் முன்பக்க கண்ணாடியை ஓங்கி அடித்து சுமார் 2300/– மதிப்புக்கு சேதப்படுத்தியும், எதிரிகள் இருவரும் புகார்தாரரை "வெளியே வாடா சுன்னி" என்று அசிங்கமாக திட்டி ஆட்டோவில் இருந்து வெளியே இழுத்து மாறி மாறி கன்னத்தில் அடித்து வலி ஏற்படக்கூடிய காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427– இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல்** :–

இவ்வழக்கில், எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. **கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை** :–

இரு தரப்பிலும் கேட்டு, வழக்காவணங்களை ஆய்வு செய்து, எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427– இன் கீழான குற்றங்களுக்கு குற்றச்சாட்டுகள் தனித்தனியாக வனைந்து விளக்கி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளிகள் இல்லை என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **அரசு தரப்பு சாட்சிகள்** :–

பட்டியல் சாட்சிகளில் இருந்து 2 நபர்களும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பால்ராஜ் அவர்கள் அ.சா.1 முதல் அ.சா.3 வரை அரசு தரப்பில் விசாரணை



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.28 17:24:17 +0530

செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5.** <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–

**5.1.** 02.06.2023 ஆம் தேதி மாலை 6 மணிக்கு அ.சா.1 – பாலகிருஷ்ணனின் மகன் அ.சா.2 – சரவணன் TN 95 A 4452 என்ற பதிவு எண் கொண்ட மூன்று சக்கர ஆட்டோவை ஓட்டி வந்தபோது, எதிரிகள் இருவரும் "ஆட்டோவை நிறுத்தடா" என்று கூறி, ஆட்டோவின் முன்பக்க கண்ணாடியில் ஓங்கி அடித்தார்கள். அதில் கண்ணாடி கீறல் விழுந்தது. பின்னர் அ.சா.2 – சரவணனைப் பிடித்து, "வெளியே வாடா..." என்று கூறி ஆட்டோவில் இருந்து பிடித்து இழுத்து மாறி மாறி அடித்தார்கள். அவருடைய அலறல் சத்தம் கேட்டுச் சம்பவ இடத்திற்குச் சென்ற அ.சா.1 – பாலகிருஷ்ணன் எதிரிகளை விலக்கி விட்டார்.

**5.2.** இந்தச் சம்பவம் தொடர்பாக அ.சா.1 17.6.2023 ஆம் தேதி இரவு 7 மணிக்கு வெம்பக்கோட்டை காவல் நிலையத்திற்குச் சென்று உதவி ஆய்வாளர் ராமமூர்த்தியிடம் புகார் மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார். அதைப் பெற்று அதன் அடிப்படையில் குற்ற எண் 159/2023–ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 427, 323, 294(b) ஆகிய குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) பதிவு செய்யப்பட்டது.

**5.3.** வழக்கைப்புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் ராமமூர்த்தி, சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.5) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.6) தயார் செய்து, சம்பவ இடத்தில் கிடந்த கண்ணாடியின் உடைந்த துண்டுகளை அத்தாட்சி மகஜரில் (அ.சா.ஆ.7) கைப்பற்றி, அவற்றை படிவம் 91 (அ.சா.ஆ.8) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அவர் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப்பதிவு செய்தார். அவருடைய விசாரணையில் இருந்து வழக்குச் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரிகள் மீது மேற்கண்ட குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6.** <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவர்களிடம் விளக்கி கேட்ட போது, அவர்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.28 17:24:22 +0530

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427– இன் கீழ் வணைந்துள்ள குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. சாட்சியங்கள் மதிப்பீடு :–**

**8.1.** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான சரவணன் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தில், அவர் ஆட்டோவை ஓட்டிச் சென்ற போது எதிரிகள் ஆட்டோவின் கண்ணாடியை உடைத்துவிட்டதாகவும், அப்பொழுது அங்கு தன்னுடைய தந்தை (அ.சா.1) வந்ததால் தான் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும் கூறியுள்ளார். இந்நிலையில், இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரும், அ.சா.2 ன் தந்தையும், சேதமடைந்த வாகனத்தின் உரிமையாளருமான பாலகிருஷ்ணன் (அ.சா.1) அவருடைய சாட்சியத்தில், சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாலை 6 மணி அளவில் அவருடைய வீட்டின் முன்பாக வைத்து, தன்னுடைய ஆட்டோவின் கண்ணாடியை அடையாளம் தெரியாத நபர்கள் உடைத்து விட்டார்கள் என்றும், அந்தச் சம்பவத்திற்கும் இந்த வழக்கு எதிரிகளுக்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாகக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.2.** தன்னுடைய முந்தைய கூற்றிற்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் முரணாகச் சாட்சியம் அளித்ததால், அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்தபோதிலும், அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகச் சாட்சியம் எதுவும் பெறப்படவில்லை. மேலும் அ.சா.1 – பாலகிருஷ்ணன் தன்னுடைய முதல் விசாரணையில், அவர் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாகக் கூறியதால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விளக்கிக்கொள்ளப்பட்டு, கூடுதல் சாட்சியாகச் சிறப்பு உதவி ஆய்வாளர் பால்ராஜ் அ.சா.3 – ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை தொடர்பான விபரங்களை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.3.** அ.சா.ஆ.1 ஆகிய புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று அ.சா.1 ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிப்படுத்திச் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகாரை அ.சா.1 தான் கொடுத்தாரா என்பதும் சந்தேகம்கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1–ன் சாட்சியம் மூலம் புகார் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.28 17:24:25 +0530

**8.4.** ஆட்டோ கண்ணாடி உடைக்கப்பட்டது தொடர்பாக அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது. மேலும், அ.சா.2 தன்னை எதிரிகள் ஆபாசமாக பேசி, அடித்தார்கள் என்று சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

**8.5.** எனவே, கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளரைத் தவிர, இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிராக ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதால், புலன் விசாரணை தொடர்பான சங்கதிகளை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரிகளை குற்றவாளி என்று முடிவு செய்யப் போதுமானதல்ல.

**8.6.** இதன்மேல் பரிசீலனை செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலன் அளிக்கத்தக்கது என்று முடிவு செய்கிறது.

**9. முடிவு:-**

**9.1.** எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 427- இன் கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுக்கு அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்கள் கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்கள்.

**9.2.** இவ்வழக்கில் PR.No.57/2024 ல் அடங்கிய வழக்கு சொத்தான அ.சா.பொ.1 உடைந்த கண்ணாடி துண்டுகள் 4 எண்ணம் ஆகியவை பயனற்றது என்பதால் அதனை அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**9.3.** இவ்வழக்கில் எதிரிகள் ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 28.07.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.28 17:24:32 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்

## பிற்சேர்க்கை

**1. அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.பாலகிருஷ்ணன் (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | சரவணன் |
| அ.சா.3 | திரு.பால்ராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 17.06.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 13.07.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 18.06.2023 | சி.எஸ்.ஆர் மனு ரசீது |
| அ.சா.ஆ.4 | 17.06.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 17.06.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 17.06.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | – | அத்தாட்சி |
| அ.சா.ஆ.8 | 20.06.2023 | படிவம்–91 |

**3. அரசு தரப்பு சான்று பொருள்** :–அ.சா.பொ.1 உடைந்த கண்ணாடி துண்டுகள் 4 எண்ணம்

**4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்** :– இல்லை

**5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** :– இல்லை

**6. எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்** :– இல்லை

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.07.28 17:24:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**குறிப்பு :–**

**1.** விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.